# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## C.C.No. 300 /2022

2026 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 05 ஆம் நாள் புதன் கிழமை அரசு தரப்பு சாட்சி–02, திரு.ஆதி என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4 ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஆதி | வயது | : | 54/26 |
| த.பெ/ க.பெ. | : | கலியபெருமாள் | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| ஊர் | : | ஜெயங்கொண்டம் காவல் நிலையம் | நிலை | : | PW02 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:**

1)நான் தற்போது ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.நாகராஜன் என்பவரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு தெரியும். இந்த வழக்கின் புகார்தாரர் எதிரியுடன் சமாதானமாகி விட்டபடியாலும், அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் சாட்சியம் அளித்துள்ளதாலும், இவ்வழக்கின் காலதாமதத்தை தவிர்க்கும்பொருட்டு, அவர் தயார்

செய்து வைத்திருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 20.09.2022 ம் தேதி காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.நாகராஜன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, முத்துக்குமரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப் பெற்று, நிலைய குற்ற எண் 337/2022, ச/பி. 294(b), 506(2) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமைத் தடுப்புச்சட்டத்தின்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3)பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் குணா, ஸ்ரீராம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அதசாஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அதசாஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

4) பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில், குற்ற சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடியபோது, எதிரியை 20.09.2022 ம் தேதி 18.30 மணிக்கு ஜெயங்கொண்டம் அண்ணா சிலை அருகில் வைத்து கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

5) பின்னர் எதிரியின் மீதான விசாரணையை முடித்து, 21.09.2022 ம் தேதி எதிரியின் மீது ச/பி. 294(b), 506(2) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமைத் தடுப்புச்சட்டத்தின்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரியின் தரப்பில் கு/வி.**

அசா1 கொடுத்த பொய்யான புகார் மனுவைப் பெற்று, சரிவர விசாரணை செய்யாமல், வழக்கு பதிவு செய்துள்ளார் என்றாலும்,

அந்த வழக்கு ஆவணங்கள் அனைத்தும் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றாலும், காவல் நிலையத்திலேயே தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கினை சரிவர விசாரணை செய்யாமல், இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.